# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No.517/2025
## வழக்கு சாட்சி PW-3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அந்தோணிராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஜெபஸ்டியன் | தொழில் | : | உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | கோவில்பட்டி | வயது | : | 64 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 05.05.2026.

**எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பொதுபணித்துறையில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். எதிரிகளை எனக்கு ஆள் தெரியாது. 08.05.2014 ம் தேதி ராஜசிங்கப்பேரி குளத்திற்கு செல்லும் கால்வாய் கரையை உடைத்து எதிரிகள் சேதம் பண்ணியதாக இளம்பொறியாளர் சரவணமுருகன் என்பவர் அறிக்கை சமர்பித்தார். அவர் தற்போது இறந்துவிட்டார். நான் பின்னர் அந்த இடத்தை சென்று பார்வையிட்டு இளம்பொறியாளரிடம் உடைத்த பகுதியை அடைக்க சொன்னேன். இளம்பொறியாளர் அடைக்க முற்பட்ட போது எதிரிகள் தடை செய்தார்கள். பின்னர் இளம்பொறியாளர் சரவணமுருகன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு எனக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சரவணமுருகன் தந்த அறிக்கையை நான் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் புகார் கொடுக்க புகார்தாரருடன் காவல் நிலையம் செல்லவில்லை.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 12:45:41 +0530